நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2(அ.சா.ஆ.9), சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

**குவிமுச பிரிவு 313(1)(ஆ) இன் படியான விசாரணை**

எதிரி– தாடகப்பன்

| | | | |
|---|---|---|---|
| 1. | கேள்வி | : | அ.சா.1 – திரு.முத்துச்செல்வம் அவருடைய சாட்சியத்தில், 27.03.2024ம் தேதி மதியம் 02.00 மணியளவில் வெங்கடாச்சலபுரத்தில் உள்ள குச்சி கம்பெனியில் அ.சா.1 வேலை செய்துகொண்டிருந்தபோது போலீசார் என்னை அழைத்ததன் பேரில் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், அங்கு அ.சா.1ன் மைத்துனர் கருப்பசாமி வாகன விபத்தில் காயமடைந்து சிகிச்சையிலிருந்ததாகவும், மைத்துனர் வீட்டிற்கு செல்வதற்காக சாத்தூர் அக்ரஹார தெரு அருகேயுள்ள நான்கு வழிச்சாலையில் சாலையை நடந்து கடந்தபோது விபத்து ஏற்பட்டதாக கூறியதாகவும், அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், அவர் சிகிச்சை பலனின்றி 10 நாட்கள் கழித்து இறந்துவிட்டதாகவும், இறந்துபோன அ.சா.1ன் மைத்துனர் கருப்பசாமி விபத்து குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்ததாகவும் அதில் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும் கூறியுள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 2. | கேள்வி | : | அ.சா.1 – திரு.முத்துச்செல்வம் மேலும் அவருடைய சாட்சியத்தில், இவ்வழக்கில் காயம்பட்ட கருப்பசாமியை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி 10 நாட்கள் கழித்து இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 3. | கேள்வி | : | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில் 19.07.2022 ம் தேதி காலை 15.40 மணியளவில் தலைமை காவலர் திரு.வெள்ளத்துரைபாண்டியன் சரக ரோந்து அலுவலில் இருந்தபோது போன் மூலம் சொன்ன தகவலைப் பெற்று வாகன விபத்தில் காயம்பட்டு அங்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சாத்தூர் அக்ரஹாரம் தெருவைச் சேர்ந்த முருகன் மகன் கருப்பசாமி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று புகார் வாக்குமூலத்தின் தன்மைகேற்ப சாத்தூர் நகர் நிலைய குற்ற எண் 289/2022 பிரிவுகள் 279, 337 இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு (அ.சா.ஆ.4) செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 4. | கேள்வி | : | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாடசியத்தில், காவல் ஆய்வாளர் பாண்டியன் வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 19.07.2022 ம் தேதி மாலை 05.30 மணிக்கு சம்பவ இடம் சென்று, சம்பவ இடத்தை சாட்சிகள் கார்த்திக் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | கருத்தப்பாண்டி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.5) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.6) தயார் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 5. | கேள்வி | : | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் பாண்டியன் சாட்சிகள் கருப்பசாமி, த/பெ.முருகன், முத்துசெல்வம், கருப்பசாமி, த/பெ.மாடசாமி, கார்த்திக், கருத்தப்பாண்டி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 6. | கேள்வி | : | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் பாண்டியன் 21.07.2022ம் தேதி 18.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 7. | கேள்வி | : | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் பாண்டியன் காயம்பட்ட கருப்பசாமி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தபோது சிகிச்சை பலனின்றி 31.07.2022ம் தேதி நள்ளிரவு 00.10 மணியளவில் இறந்துவிட்டதாக கிடைத்த தகவலைப் பெற்று வழக்கின் சட்டப்பிரிவுகளை இ.த.ச பிரிவுகள் 279, 337 இருந்து பிரிவுகள் 279, 304 A ஆக மாற்றம் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.7) தயார் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 8. | கேள்வி | : | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், வழக்கினை மேற்கட்ட புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சென்று 31.07.2022 ம் தேதி இறந்து போன கருப்பசாமி என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்பாக பிரேத விசாரணை செய்து அறிக்கை (அ.சா.ஆ.8) தயார் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 9. | கேள்வி | : | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி சாட்சிகள் ராமலட்சுமி, ராமலட்சுமி ராமகிருஷ்ணன், மாடசாமி, முருகேசன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 10. | கேள்வி | | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி பிரேதத்தை |

| | | | |
|---|---|---|---|
| | | | முதல் நிலை காவலர் புஷ்பராஜ் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அரசு மருத்துவரிடம் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக ஒப்படைக்க அனுப்பியுள்ளதாகவும், அவர் பிரேத பரிசோதனை செய்வதற்கு பிரேதத்தை அடையாளம் காட்டி இறந்து போன அ.சா.1ன் மைத்துனர் கருப்பசாமி என்பவரது உடலை பிரேத பரிசோதனை முடிந்த பின்பு நல்லடக்கம் செய்ததற்காக அவரது உறவினரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் வழக்கு |
| 11. | கேள்வி | | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி விபத்துக்குள்ளான TN 24 W 0003 என்ற பதிவெண் கொண்ட Maruti Suzuki Alto வாகனத்தை ஆய்வு செய்த விருதுநகர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவரை விசாரணை செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை (அ.சா.ஆ.9) பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளதாகவும் மேலும் வழக்கு விபத்து இயந்திரக்கோளாறால் ஏற்படவில்லை என்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவருடைய அறிக்கையில் கூறியுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் வழக்கு |
| 12. | கேள்வி | | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், காயம்பட்ட அ.சா.1ன் மைத்துனருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.அருண் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து விபத்து பதிவேட்டை (அ.சா.ஆ.10) பெற்றுள்ளதாகவும் மற்றும் மேல் சிகிச்சை அளித்த விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பாண்டீஸ்வரன் என்பவரை விசாரணை செய்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்து அவர் வழங்கிய காயச்சான்றை (அ.சா.ஆ.11) பெற்றுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் வழக்கு |
| 13. | கேள்வி | | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், இவ்வழக்கு விபத்தில் இறந்த கருப்பசாமிக்கு சிகிச்சை அளித்த மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை மருத்துவர் சேது கண்ணன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இறந்த கருப்பசாமியின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை மருத்துவர் தேவி பியான்சா என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை (அ.சா.ஆ.12) பெற்று அவரது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் வழக்கு |
| 14. | கேள்வி | | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி தலைமை |

| | | | |
|---|---|---|---|
| | | | காவலர் புஷ்பராஜ் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் வெள்ளைத்துரைப்பாண்டியன், முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் பாண்டியன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் வழக்கு |
| 15. | கேள்வி | | அ.சா.5 – திரு.பிரைட்ஜசக்சுவாமிநாதன் சிறப்பு சார்பு ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி அவரது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் குற்ற சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) –ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் வழக்கு |
| 16. | கேள்வி | : | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 17. | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | இல்லை |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர்கள் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

(ஓம்/–சா.வரதராஜன்)
நீதித்துறை நடுவர், எண்.2,
சாத்தூர்.

// உண்மை நகல்//P.P